
# திறவுகோல்

2055 | மார்கழி

மாத இதழ்



வெளியீடு:

மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# ஆதிக்கத்தின் அசுரத்திற்கு

நஞ்சைச் சொட்டும் நல்வீணை
புழுதியில்
எறியப்படத்தானே வேண்டும்
ஆலகால விடத்தின் குடம்
குணமென்றால்
குப்பை தான் கொட்டுமிடம்
திசை முழுக்க
இசை கூட்டும் இங்கிதம்
இதயத்தின் வழி மறந்து
போனதெங்கே
பொசுக்கென மல்லாந்த உடல்
வானோக்கி உமிழ்ந்ததெப்படி
ஆதிக்கத்தின் அசுரம்
அத்தி பூதத்தாற் போலும்
அரங்கேறுமோ
கள்ளிப்பழ நடுவிலிருக்கும்
நாக பல்லென உன் சொல்
முள்ளினும் கொடிது
முகப்பூச்சு கலைந்த நாளில்
முழுநீள சர்ப்பம் நாவில்
நல்லவேளை நவிழ்ந்து கொண்டது
புத்தி கொண்ட பொன் மாலை
கிரீடம் தலையில் இருக்க
வெற்றுத்தவ்வல் தவளை ஆகிறதோ
உருண்டு போகும் பாறை இது
நசுக்கி விடும் நகரு...!

## வேடிக்கை மனிதன்

தினமும் வந்தமரும் காகத்துக்கு
இன்று வர தோன்றவில்லை
தப்பில்லை என்கிறதோ
திண்ணை

காலி செய்யப்பட்ட எதிர் வீடு
காற்றாட வேடிக்கை பார்க்கும்
சிறு குழந்தை போல

வீதியை
உசுப்பிக் கொண்டே போகும்
இதயம் பெருத்த புல்லட்
காதல் தோல்வியாக இருக்கலாம்

பின் கட்டில் கூவும் குயிலுக்கு
முன் கட்டு வர
ஒரு தயக்கம் ஒரு மயக்கம்

பதினோரு மணி தொடர் நாடகம்
தொடங்கி விட்டது
பேசிக்கொண்டே இருக்கும்
பக்கத்து வீட்டம்மா வாயில்
பிளாஸ்திரி

எத்தனை நேரம் சூனியம் வெறித்து
படுத்திருப்பது
எழுகிறேன்
சரிந்து கிடந்த வீதி நிற்கிறது

## ராதையாகு

சித்திரத்துள் இருந்து
நீ வந்திருக்க வேண்டும்
சீக்கிரத்தில்
சித்தம் சேர்ந்து விட்டாய்
பருவத்தை மீண்டும்
விதைக்க கற்றிருக்கிறாய்
பரவசம்

மனதில் பறவை ஆகிறது
இடையிலிருந்து தொடங்கும்
கவிதையை
நான் முடிப்பதே இல்லை
இசையிலிருந்து தொடங்கும்
நீ கூட அப்படி தான்
கிளை விட்ட இலையின்
படபடப்பு தான்
நீ அழைக்கும் போதெல்லாம்
யாழ் அருவி அலைபேசியில்
முதல் முறை பார்த்த முகம்
நினைவிலில்லை
யுகம் கடந்து வந்த நினைப்பை
எப்படி சொல்ல
குரல் வழியே குறையும் வயதை
குழலூதும் கண்ணனுக்கு
சாட்டி விடலாம்
ராதையாகு
வாதை விடட்டும்...!

—

கவிஜி

---

# தேடல்

கவிதையைத் தேடி
அலுத்துப்போன எனக்கு
ஒரு மழை
சிறு வெயில்
நீளமான ரயில் பெட்டி
இருள் சூழ்ந்த மேகமென
அனைத்தும் ஓரம் கட்டி நிற்கிறது
மனது நின்ற பேருந்து நிறுத்தத்தில்
கவிதையென...

## புள்ளியாய் சிறுத்தது பருமன்

புள்ளியில் ஆரம்பித்து கோடுகளில்
முடியும்
அந்த நிலைபாட்டினைத்தான்
கடிகாரத்தின் முட்கள்
சுழலத்தொடங்கின

தரை மிதித்து கால் உயர்த்தி
கைகூப்பிடும் நிலைமாற்றத்தினைத்தான்
இடறிவிழுந்த மெழுகுவர்த்தியின்
ஒரு துளி விவரிக்கிறது

நீளமும் அகலமும் கணக்கின்
இரு வழிகளாய்
ஒரு பருத்த பருமனின்
இடப்பற்றாக்குளையாய்
புள்ளி வைத்து கோடாக்ககுகிறது
வாழ்வு

நீந்திய மீன்களின் செதில்களையும்
நீந்தும் மீன்களின் செதில்களும்
நிரம்பி வழிந்த வலியைப் பொறுத்து
தான்
திசை காட்டுகின்றன...

## உறக்கம் விழித்த பொழுதில்...

நேற்று விழித்த பொழுதில்
இன்றின் நிகழ்களெல்லாம்

கனவில்
இன்றின் விழிப்பில் நாளை
நிகழ்வெல்லாம் கனவில்
தினம் களித்த உறக்கத்தில்
எழுந்து கொண்ட
உறக்கம் விழித்த பொழுதில்
நான்
கடித்து துப்பிய நகங்களும்
உதறித்தள்ளிய தலை மயிர்களின்
துகள்களும் தான் எஞ்சியது
ஆனாலும்
கொட்டிய மழையில் ஒரு சொட்டு
மழையைத் தாங்குகிறது
காளானின் கீழ் புதையுண்ட நகத்தின்
வேர்..

மீண்டும் உறங்க தயாராகிறது
உறக்கம் விழித்த பொழுது....

## நேற்று மடித்த காகிதம்

நான்
தினம் எழுதும் கவிதைகளை விட
நேற்று
ஏதோ ஒன்று தவறுதலாக தெரிந்தது
என்னவென்று  கண்டெடுத்து
சரிசெய்வதற்கு
தலைப்பை மறந்து
மீண்டும் எழுத தொடங்குகிறேன்
தலைப்பை மறந்து மடித்தெறிந்த
காகிதத்தில்

## தனிமையின் பசி

எனது தனிமை ஆட்கொண்ட பசிக்கு
ஒருபோதும்
யாராலும் உணவளிக்க இயலாது
ஊண் தின்று வளர்ந்த சிங்கத்தின்
முன்னே பனி நிறைந்த புல்லினை
காண்பிப்பது போல்தான்
சிறு பருக்கைகளில் புதைந்து கிடக்கிறது
தனிமையின் பசி

## குறுங்கவிதை

மழை கொட்டுமிடத்தில்
கையேந்தி நிற்கின்றன
காலுடைந்த பாறைகள்

*

காளான் குடைகள்
விழுந்தவுடன் வழுக்கின
வான் தவறிய மழைத்துளிகள்

*

ஆசை மறந்த புத்தனையும்
சிலிர்ப்பூட்ட செய்கிறது
விரல் வழியும் மழைத்துளி

## உனக்கே தெரிந்த உண்மை

நிழல் படர்ந்தும் நீ இன்றும்
இரட்டுக்குள் தான் இருக்கின்றாய்
யாரும் உன்னை
விரல் பிடித்து இழுத்து
வெயில் பட செய்யப் போவதில்லை
சிறு விரல் நீட்டி
சூடேற்றிப் பார்
விரல் மயிர்கள் நெட்டிக்கும் நேரத்தில்
நீ விரல் உதறாமலா சென்றிடுவாய்
திடிர் மழையில் வான் பார்க்காத குடை
மனங்களைப் போல்...

## ஒரு புல்லினை

நனைத்திட மழை பொழிந்திடுமெனில்
அந்த
நாய்குட்டியின் வாலாட்டலும்
ஆட்டுக்குட்டியின்
சிறு உதறலும்
மழை முடிந்தவுடன்
வானை
மீண்டும்
வரவேற்பதாகத்தானே அர்த்தம்

## யதார்த்தமென்பது

ஒன்றுமில்லை
எறிந்த கல்லில்
உன் பலமும்
விழுந்த பொருளின்
அறியாத வலியும்
சாகசமென குறிப்பிடுவதுதான்..

## எட்டிப்பார்க்கின்றன சுவர்கள்

இரு கரங்கள் உண்டு
அவ்வப்போது தேநீரும் உண்டு
ஆசையாக அவளை உயர்த்தி அமர
வைத்ததுண்டு
இப்போது யாருமில்லாத
வெறுமையில்
ஒன்றையொன்று எட்டிப்பார்க்கின்றன
எதிரெதிர் வீட்டு கைப்பிடி சுவர்கள்....

## தூரமாக நிற்பவன்

அந்த சாலையோர பேக்கரியில்
நிறைந்து வழிகிறது கூட்டம்
திடீரென தடுக்கி விழுந்த
பிச்சைக்காரனை
தொட்டு தூக்குகிறான்
அவன்
இனி கூட்டத்தின் இருக்கும் கடைசி
அழுக்கான கண்கள் வரை
அவன் சற்று விலகியபடிதான்
தூரத்தில் நிற்க வேண்டும்

## அவள்

தவறி அழைத்த பெயர்களாகவே
மாறிவிடத் தோன்றுகிறது மனது
இருப்பினும்
அழைத்தே தானே ஆகவேண்டும்
வருகையில் எழுதிய எனது பெயரை...

## இனி சொல்வதற்கு ஏதுமில்லை

எனது
நிர்வாணத்தின் மீதமர்ந்த
காமத்தின் எடை முழுவதும்
மொத்தமாக இடம்பெயரத்
தொடங்கியது
வேற்றிட ஆசைகளின்
பாதையில்..

உயரமான எண்ணங்களும்
தாழ்வில் புதைந்த
விருப்பங்களும்
வழிந்தோட துவங்கியது
ஆசைகளின் வெற்றிடத்தில்
விழுந்த பலா வகை நிழல் போல...

மீண்டும் வியர்க்கத் தொடங்கியது
நட்டமுற்ற விரலில்
தீண்டிட முற்படும்

மற்றொரு நிர்வாணப் பேராசை கரங்கள்

## ஒரு புள்ளியை மொழிப்பெயர்த்து

மையில் தீட்டி உதறியெடுத்தேன்
யாரோ ஒருவன்
கவிதையென
படித்து கிழித்தெறிந்தானொருவன்
மீண்டும் புனையத்தான்
காரணமில்லை
இப்படிக்கு எனும் சொல்லின் முடிவில்...

## புதிய குடித்தனம்

கணவனும் மனைவியும் வீட்டிற்குள்
அவ்வப்போது வந்து எட்டிப்பார்க்கிறாள்
மனைவி
அங்குமிங்கும் விளையாடும்
குழந்தைகளை
இழுத்து பூட்டியபிறகும்
ஒலித்துக் கொண்டேயிருக்கிறது
தாய்மையின் ஏக்க ஒலி...

—

சே. கார்கவி கார்த்திக்,
நாகப்பட்டினம்.





**இரா. நிவேதா**, எட்டாம் வகுப்பு

# முகமூடிகள்...!

சிரிப்பதை நம்பி...
சிநேகம் கொள்கிறோம்....!
அவன் சிரித்தே..
கழுத்தறுப்பான் என்பது
தெரியாமல்......!

பணிவை கண்டு
பாசம் கொள்கிறோம்...!
அவன் வாரிவிட
நம் கால்களை தேடுவதை
அறியாமல்....?

பேச்சினை கேட்டு ...
பல் இளிக்கிறோம்....
அதன் விசத்தன்மை
உணராமல்....?

அன்பு கண்டு
அசந்து போகிறோம்...
அவன் ஆழ் மனது
வன்மம் புரியாமல்.....?

பாசம் கண்டு
பரவசம் கொள்கிறோம்...!
அவன் அதற்கும்
விலை வைத்திருப்பது
தெரியாமல் ....?

எங்கும் எப்போதும்..
சூழ்நிலைக்கேற்ப....
முகமூடிகள்!
சில பொருந்துகின்றன...
சில பொம்மையாகின்றன !

ஆனாலும்..
முகமூடி அணிய
மறப்பதேயில்லை...?

அதுசரி -
வாழ்வில் எப்போதுதான் ..
உண்மை முகம்
காட்டுவது ....!?

## அழிவிலும் சமத்துவம் .!

எத்தனை புயல்கள்..!
எத்தனை மழைகள்...!
எத்தனை பேரிடர்கள் ...!
எத்தனை அழிவுகள்.,.!
மனது வலிக்கிறது -?
அழிந்த இயற்கையை...?
புதையுண்ட மனிதர்களை..?
மீண்டும் பெறுவது
கடினம்..!
ஆனாலும் -
சோகத்திலும் ஒரே ஆறுதல்...!
அழிப்பதில் -
நீ சாதி, மதம், இனம்
எதுவும் பார்க்கவில்லை...?!
ஆனால் மனிதன் மட்டும்...
இன்னும்...
பாடம் கற்கவேயில்லை...!?

—



முனைவர். சா சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.

# டோலி

அண்ணே... கொஞ்சம்
சீக்கிரமா வாங்கண்ணே
என் வூட்டுக்காரிக்கு
பிரசவ வலி வந்து விட்டது.
அடடா அப்படியா?
ஏம்பா நம்ம ஊருக்கு
மிதிவண்டி கூட
வருவதற்கு பாதை
இல்லையே
பின்னே எப்படி
மருத்துவமனை போக
முடியும்.
இல்லண்ணே
எப்படியாவது என்
பொஞ்சாதியையும்
புள்ளையையும்
காப்பாத்தணும்
அண்ணே வாங்க
என்று கூறிவிட்டு
அவசர அவசரமாக
குச்சியை எடுத்து
டோலி கட்டி அதில்
கண்ணம்மாவை
உட்கார வைத்து
சுமார் 30 கி.மீ
தோளிலேயே சுமந்துக்
கொண்டு மலையடிவாரத்தில்
உள்ள ஆரம்ப சுகாதார
மையத்திற்கு
கொண்டு வந்தனர்
அந்த மலை வாழ்
மக்கள்.
அசுரவேகத்தில்
அறிவியல்
வளர்ச்சியடைந்தாலும்
இன்னும் எத்தனையோ
கிராமங்கள்
சாலை வசதிக்கூட
இல்லாத கிராமமாகத்
தான் உள்ளது என
ஊடகங்களுக்கு
பேட்டி அளித்து விட்டு
சென்றார் அப்பகுதியில்
வசிக்கும் பெரியவர்
ஒருவர்.

## இயற்கையின் வலி

வீட்டிற்குள் தண்ணீர்
புகுந்து விட்டதென
புலம்புவோம். ஆனால்
தண்ணீர் புகுமிடத்தில் தான்
வீட்டைக் கட்டுவோம்...

சாலையில் மரம்
வேரோடு சாய்ந்து
போக்குவரத்து பாதிப்பென
கூறுவோம். ஆனால்
மரம் வளருமிடத்தில்
சாலைகளை
அமைத்து விடுவோம்...

பாறைகள் உருண்டு
வீடுகள் சேதமடைந்து
விட்டதென
கதறுவோம். ஆனால்
மலைச்சரிவில் தான்

வீட்டைக்கட்டுவோம்...

கழிவு நீர் வீடுகளுக்குள்
புகுந்து விட்டதென
கூப்பாடு போடுவோம். ஆனால்
நெகிழிகளை
கழிவுநீர் கால்வாய்களில்
வீசியெறிவோம்...

மழைநீரை
சேமிக்காமல்
விட்டு விடுவோம்
பின்பு காவிரி காவிரி
என்போம்...

மரங்களை
வெட்டாதீர் என்போம்.
ஆனால் மரங்களை
வெட்டி கூழாக்கி
காகிதம் செய்வோம்...

இயற்கைக்கு எதிராக
நாம் செய்யும்
ஒவ்வொரு செயலும்
இயற்கைக்குத்
தரும் வலியே...

இயற்கையோடு
இணைந்து வாழ
கொஞ்சம் முயற்சி
செய்வோம்
இனி வாழும் நாளில்...

—

மு. ஜெரோஷா,
திருப்பூர்.

---

# நாணயம்

கடைகளில்
வாங்கிய பொருட்களுக்கு
பணம் தரும்போது
தவறுதலாக கணக்கிட்டு
கடைக்காரர்
மீதிப்பணத்தை
மிகையாகத்
திருப்பியளிக்கையில்
சாத்தான்
சட்டைப் பையில்
பணத்தையழுத்தி
தலைகுனிந்து
அவ்விடத்தை விட்டு
விரைவிலகலச் சொல்லும்
சாத்தானை புறந்தள்ளி
நாணயத்தைத் திருப்பித்
தருவதிலிருக்கிறது நாணயம்
சுண்டிய நாணயத்தின் இரு பக்கங்களில்
சாத்தானும் கடவுளும்
மனம் எந்த பக்கத்தில்
சாய்கிறதென்பது
தீர்மானிக்கிறது
நாம் யாரென்பதை

—

பா. சிவகுமார்

# பல நேரங்களில் பல மனிதர்கள்

சில நேரங்களில் சில மனிதர்கள் என்று தான் முதலில் சிந்தனை வந்தது. ஆனால் பல நேரங்களில் பல மனிதர்கள் அப்படித்தான் இருக்கிறார்கள் என்பதுதான் நான் கண்ட யதார்த்தம். எந்த மனிதனிடமிருந்து எப்போது காயம் கிடைக்கும் என்பதை கணிக்கவே முடியாது. எந்த மனிதன் எப்போது கவிழ்ப்பான் என்று சொல்லி விட முடியாது. பழகிய யாருமே பரிதவிக்க விடலாம். கூடவே வந்து கொண்டிருக்கும் கால்கள் சட்டென நின்று விடலாம். அணைத்துக் கொண்டே இருக்கும் கைகள் திக்கென விலகி விடலாம். பேசிக்கொண்டே இருக்கும் வாய்கள் மௌனித்து விடலாம்.

கூட இருந்தே குழி தோண்டுவது தனி ரகம். இங்கும் அங்கும் மாற்றி மாற்றி பேசி... போட்டு கொடுத்தல் தனி வகை.

இருபது வருட நண்பராக இருக்கலாம். உப்பு பெறாத விஷயத்துக்கு ஒதுங்கி கொள்ளலாம். வாய்க்குள் இருந்து மிட்டாயை எடுத்து வாயில் போட்டுக் கொண்ட நண்பன் இன்று என்னை பார்த்தாலே தலை தெறிக்க ஓடுவதற்கு காரணம்... வேறென்ன அகங்காரம்தான். ஒன்றாக விளையாடி ஒன்றாக வளர்ந்த நட்புகள் முடிந்தளவு நம்மை ஒதுக்கி அல்லது ஒதுங்கி செல்வதற்கெல்லாம் காரணம் என்ன. அதே ஒரு சொல் மந்திரம் தான். ஈகோ.

மானுட இயல்பில் இதெல்லாம் சாதாரணமப்பா என்று யுத்தானந்தா ஸ்வாமிகள் அடிக்கடி சொல்வதுண்டு.

சரி விடயத்திற்கு வருகிறேன்.

உன் எழுத்துக்கு அடிமை.. உன் அன்புக்கு அடிமை என்று சொன்ன ஆளெல்லாம் இருக்கும் இடம் தெரியாமல் போய் விட்டார்கள். நீ இன்றி இந்த உலகத்தில் இருள் மட்டும் தான் என்றவர்கள் மாயமாய் மறைந்து விட்டார்கள். அடுத்த நாள் கல்யாணத்தை வைத்துக் கொண்டு முதல் நாள் வந்து கூட்டிட்டு போ என்று சொன்ன கவிதையெல்லாம் காணாமலே போய் விட்டது. நெடுநாளைய சிறு வயது நண்பர்கள் கூட நான் என்னவோ பெரிய உச்சத்தை அடைந்து விட்டது போல... வெறிக்க பார்த்துக் கொண்டே... அப்படி அப்படியே ஒதுங்கி கொண்டார்கள்.

இதில் உறவினர்கள் பற்றி சொல்லவே வேண்டாம். முதல்ல யார் நல்லா இருக்கீங்கன்னு கேட்பது தான் அவர்கள் பிரச்சனை. ஒரு முறை போகும் போது நன்றாக பேசினார்கள்

என்று மறுமுறை போகும் போதும் பேச முயற்சித்தால்.... நாலு கேள்விக்கு ஒரு பதில் சொல்லி விட்டு மற்ற கேள்விக்கு உதட்டை பிதுக்கி கண்களை திருப்பி.. அய்யயோ அது சகிக்க முடியாத பொம்மலாட்டம். இதென்னடா சனி இப்படி ஞாயிறில் வந்து சேர்ந்திருக்கிறது என்று தோன்றும்.

நன்றாக தான் பழகி இருப்பார்கள். சட்டென பேசுவதை நிறுத்திக் கொள்வார்கள். அப்படி அப்படியே விலகி விடுவார்கள். அது ஏன் அப்படி என்று நிறைய முறை சிந்தித்திருக்கிறேன். சிந்தனையின் நீட்சி நின்று ஆராயும் இடம் ஒன்று அகங்காரமாக இருக்கும். அல்லது பாதுகாப்பின்மை ஆக இருக்கும். பாதுகாப்பின்மை. தன் அறிவு குறித்தோ... பிரபலம் குறித்தோ... வீட்டிலோ சமூகத்திலோ தனக்கிருக்கும் இடம் குறித்தோ... எப்போதும் மற்றவர்களோடு தன்னை சமன்படுத்தி பார்த்துக் கொள்ளும் சுய பற்றாக்குறை குறித்தோ மேலெழும் பாதுகாப்பின்மை.

15 வருட கால நட்பாக இருக்கும். ஆனால் தேவையான இடத்தில் உதவி இருக்காது. முக்கியமான இடத்தில் காயப்படுத்தி கவிழ்த்தி இருக்கும். இதெல்லாம் எதில் சேர்த்தி விவாதிப்பது. புரிந்து கொள்ளலில் இருக்கும் சிக்கல்... வேகமாய் ஈகோவை தூக்கி மாட்டிக் கொண்டு தன்னை மறைத்துக் கொள்ளும்.

சிலரெல்லாம் உள்ளே பயங்கரத்தை வைத்துக் கொண்டு வெளியே பஞ்சு மிட்டாய் போல பழகுவார்கள். அது தனி பிரிவு. அதெல்லாம் தெரியாமலா காஃப்காவுக்கும் காம்யுவுக்கும் நண்பர்களாக இருக்கிறோம்.

ஆண் பெண் நட்பில் இதே சம்பவங்கள் வேறு மாதிரி நிகழும்.

என் கணவர் சமூக ஊடக பிரபலம். தப்பா நினைக்க மாட்டார். என் மனைவி ரெம்ப நல்லவ. என் நட்பை மதிப்பா என்று சொல்லி கல்யாணம் ஆகி ரெண்டே மாசத்தில் இருக்கற இடம் தெரியாமல் சொல்லாமல் கொள்ளாமல் நட்பில் இருந்து விடைபெற்று சென்ற ஆட்கள் நிறைய இருக்கிறார்கள்.

எனக்கு நெருங்கிய நண்பன்... என் கல்யாணத்துக்கு பிறகு கூட அவனோடு ஊர் சுத்துவது... திரைப்படத்திற்கு போவது என்று எல்லா நிகழ்விலும் அவனோடு இருந்திருக்கிறேன். அதுவே அவனுக்கு கல்யாணம் ஆன மறு மாசம் இடம் பார்க்க போலாம் என்று கூப்பிட... அதற்கு அவன் சொல்கிறான்.

"என்ன விஜி பண்றது.. கல்யாணம் ஆகிடுச்சு... அவளுக்கு இதெல்லாம் பிடிக்கலயாம்..."

"அடிங்.... வைடா போன..." என்று ஒரு கத்து கத்தி வைத்தது தான்.. இன்று வரை பெரிதாக இணைப்பு இல்லை.

இதற்கெல்லாம் அடிப்படை என்ன என்று யோசிக்கிறேன். ஒன்று "தனக்கு மட்டுமே என்ற எண்ணம்" அதிகமாகி அதுவே சந்தேகமாக மாறி அதுவே அகங்காரமாக மாறி விடுவது அல்லது எந்த உறவில் இருக்கிறோமே அந்த உறவில் பாதுகாப்பின்மையை உணர்வது.

தன்னிடம் மட்டுமே பேச வேண்டும். தான் தான் முக்கியம். தனக்கே முக்கியத்துவம் தர வேண்டும்... தன்னை தாண்டி தான் மற்றவர்.. என்று மெல்ல மெல்ல அன்பின் பெயரில் நம்மை ஆக்கிரமித்து ஆளுமை செய்து... அவர்களையும் அறியாமல் அவர்கள் கட்டுப்பாட்டில் வைக்க முயற்சிப்பது. எதுவாக இருந்தாலும் என்னிடம் தானே முதலில் சொல்லி இருக்க வேண்டும். உன்னிடம் இருந்து தான் பிறந்த நாள் வாழ்த்து முதலில் வந்திருக்க வேண்டும். புது சட்டையா..? என்கிட்ட சொல்லவே இல்லை.. என்று இந்த முதல் முதல் முதல் என்ற பூதம் அவர்களை போட்டு பிராண்டி எடுக்கும். தன்னை சார்ந்தே அவர் உலகம் இயங்க வேண்டும் என்று ஏங்கும். இதில் எது ஒன்று நடக்காத போதும்.. அந்த "தனக்கு மட்டுமானது தான் என்ற எண்ணம்" மெல்ல மெல்ல சந்தேகமாக உருமாறும்.

சந்தேகம் தான் இருப்பதிலேயே உள்ளிருந்தே நம்மை வீழ்த்தும் பேராயுதம். கேள்விக்கும் சந்தேகத்துக்கும் வித்தியாசம் உண்டு. எங்கே வேண்டுமானாலும் கேள்வி கேட்கலாம். சந்தேகம் என்பது வேறு. அது குனிய வைத்து கும்மி அடித்து விட்டு சென்று விடும். சந்தேகத்தால் பிரிந்த உறவுகள் இங்கே ஏராளம். கற்றலில் முதல் படியாக இருக்க வேண்டிய சந்தேகம்... உறவுகளில் நட்புகளில் ஒரு படியாகவும் இருந்து விடக்கூடாது. நம்பிக்கைக்கு அப்படியே எதிர்பதம் மட்டும் இல்லை சந்தேகமென்பது. அது தேகத்தை அரிக்கும் புற்று. சிந்தனையை அரிக்கும் கரையான்.

அதன் பிறகு அது அகங்காரமாக வெளிப்படும். நானா நீயா தாண்டி... நான் தான் நான் தான் என்று நெஞ்சில் அடித்துக் கொண்டு அழும். அழுகையை புறக்கணிக்கும் உறவின் மீது வெஞ்சினம் பூண்டு வன்மம் வளர்க்கும். உள்ளபடியே அகங்காரத்தின் அடுத்த கட்டம் சண்டை.... பிரிவு.. என்று ஒதுங்குதல். இந்த அகங்காரம் இருக்கும் கால கட்டத்தில் அவர்கள் நம்மை எங்கும் எப்படியும் கவிழ்க்கவே பார்ப்பார்கள். வாய்ப்பு கிடைக்கையில் எல்லாம் கீழே தள்ளி விட்டு உள்ளே சிரிப்பார்கள். நம் தோல்வி அவர்களுக்கு சீனி மிட்டாய். அகங்காரம்... சண்டைக்கு முன்னேறுகையில்.... புறம் மிக முக்கியமான இடம் வகிக்கும். தெரிந்தவரிடம் கொஞ்சமாக புறம் பேசுவார்கள். தெரியாதவர்களிடம் அதிகமாக புறம் பேசுவார்கள். வாய்ப்பு கிடைக்கையில் எல்லாம் குற்றமே குரலாக ஒலிக்கும். வாய்ப்பு கிடைக்காத போது குற்றத்துக்கு ஏங்கும் குலை நடுக்கம்.

அன்பென்பது நம்பிக்கை. அது தனக்கு மட்டும் தான் என்ற எண்ணத்திற்குள் செல்லாது. அது சக உயிரை கட்டுப்படுத்தாது. கட்டாயப்படுத்தாது. எங்கு சுழன்றாலும்... அது தன்னை வந்தடையும் என்ற பெரும் நம்பிக்கை தான்.. அன்பின் அகல நீளம். ஆனால் அதெல்லாம் விடுத்து... ஆசைக்கும் அன்புக்கும் வித்தியாசம் தெரியாமல் பழகி... பாழ் பட்டுக் கொள்ளும் நட்போ காதலோ உறவோ பரிதாபத்துக்குரியது. எதிர்பார்த்து எதிர்பார்த்து மன அழுத்தம் எகிறுவதை விட... நாமே ஒப்புக்கொடுத்து சேர்ந்து விடுதல் அன்பை கூட்டி அமைதியை ரத்தத்தில் பாய்ச்சும்.

அவன் அப்பிடி சொன்னான்... இவ இப்பிடி சொன்னா என்று வந்து... வாயை பிசைந்து கொண்டு நிற்காது நம்பிக்கை. ஆனால் "தனக்கு மட்டும் தான் என்ற எண்ணம்" பிடித்து விட்டால் பிடி தளர்ந்தாலும்... வடும்பு வாழ்நாள் நாள் முழுக்க படிந்து விடும். பேய் பிடித்தல் எனும் மனப்பிறழ்வைக் கூட "தனக்கு மட்டும் தான் (possessive)" என்று தான் சொல்வார்கள். அப்படி possessiveம் ஒரு வகையான பேய் பிடித்தல் தான். அவ்ளோ காதல்.. அவ்ளோ அன்பு.. அவ்ளோ அக்கறை என்று அதற்கு அர்த்தம் கற்பிப்பதை அனுமதிக்க முடியாது. அது மிருகத்தனத்தின் மறுபக்க வெளிப்பாடு. அன்பை அழுகையாக்கி அதையே ஆயுதமாக்கி தன்னையும் அறியாமல் அடக்கி ஆளும் தூரத்து வன்மம் கிட்டத்தில் அரவணைப்பதாக தோன்றும்.

எந்த உறவுக்கும் கால கணக்கு முக்கியம் இல்லை. 25 வருட நட்பு கூட அகங்காரம் கொண்டு ஒரு கட்டத்தில் தானாக விலகி போனதெல்லாம் உண்டு. அகங்காரம் என்பதே தன் வளர்ச்சிக்கு தானே போடும் விலங்குதான். சரி அகங்காரத்தை தவிர்க்க முடியாத சூழலிலும்... யாருக்கு யார் மீது அகங்காரம் என்று ஒன்றிருக்கிறது தானே. அதிலும்.. புரியாமை இருந்தால் என்ன தான் செய்வது.

பொருளாதார ரீதியான அகங்காரம்... அறிவு ரீதியான அகங்காரம்... சமூகத்தில் கொண்ட இடத்தின் அடிப்படையில் வரும் அகங்காரம்... என்று அகங்காரம் ஒரு மலைப்பாம்பு. அதை கழுத்தில் போட்டுக் கொண்டு வேடிக்கை காட்டலாம் என்றால் வாய்ப்பில்லை. பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல... சொந்தத்துள் வரும் அகங்காரம் ஒரே ஒரு விருந்தில் தெரிந்து விடும். காதலில் வரும் அகங்காரம் யார் முதலில் தொலைப்பேசியில் அழைப்பது என்பதில் தெரிந்து விடும். நட்பின் அகங்காரம் ஒரு மாச சம்பளத்தில் தெரிந்து விடும்.

ஆண் பெண் நட்பில் இருக்கும் "தனக்கு மட்டும் தான்" என்பது எப்போதுமே அபாயகரமான ஆணி. அதை ஆரம்பத்திலேயே பிடுங்கி போட்டு விட வேண்டும். இல்லை எனில் அவர்களுக்குள் வரும் அகங்காரம் சகிக்க முடியாத சவாரி போன்றது. எப்போது

கவிழும் எப்போது கவிழ்த்தும் என்றே தெரியாது. யாருக்கு என்ன வருமோ யாருக்கு என்ன தெரியுமோ அது தான் அவர்கள். யாருக்கு என்ன ரசனையோ யாருக்கு என்ன விவரமோ அது தான் அவர்கள். சரி தவறு இரு பக்கத்தையும் காட்டி பழகுவது நன்று. குளித்து முடித்து மாவு போட்ட முகத்தை மட்டுமே காட்டுவதில் இருக்கும் சிக்கல் சொல்லி மாளாது. தூங்கி எழுந்த முகமும் கூட நமது தான் என்ற வெளிப்படைத்தன்மை அவரவரை அவரவராக வைத்திருக்கும்.

ஒருவருக்காக ஒருவர் மாறுகிறார் என்ற ஈர வெங்காய பாத்திரங்கள் எல்லாம் வாழ்க்கைக்கு உதவாது. அவரவர் அவரவராக இருக்க... இன்னொருவர் தலையிடக் கூடாது. அவ்வளவே. யாரின் சுதந்திரமும் யாரிடமும் இல்லை. அது கொடுப்பதோ பெறுவதோ இல்லை. உணர்வது. ஆக "தனக்கு மட்டும் தான்" என்று இறுக்கி பிடித்து மூச்சடைக்க செய்ய கூடாது. அதே நேரம் பேரன்பின் வெளியை ஒன்றாய் காண தவறவும் கூடாது.

அடிப்படை சக உயிர்களை மதித்தல். அவ்வளவு தான். தவறென்றால் சுட்டி காட்டலாம். சரி என்பதற்காக அதை புகுத்த யாருக்கும் அனுமதி இல்லை. எல்லாம் தாண்டி பிடிக்கவில்லை என்றால் பேசி பிரிவது நாகரீகம். சந்தேகம் கொண்டு அகங்காரம் தின்று... புறணி பேசி பிரிவது... கொண்ட உறவை கொச்சைப் படுத்துவதாகும்.

அன்பை ஆயுதமாக்கி உடன் இருப்போரை அடக்குவது... ஆழமாய் யோசித்தால் அநியாயம். மேலாப்பில் யோசித்தால் பொசசிவ்னெஸ்.

—

கவிஜி

## N. S. சாய் ருத்ரா,

**ஆறாம் வகுப்பு,**
**ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,**
**வடுவூர் தென்பாதி.**





# வாழ்வது இனிதே

உலகத்தில் என்றென்றும் உண்மையுடன் வாழ்ந்திடுவோம்
நலமென்றே யாவினையும் நன்றெனவே ஏற்றிடுவோம்
நிலத்தினிலே கமுக்கத்தில் நிலநீரும் இருந்திடுமே
நிலவினிலே தனித்துவமும் நிலத்தினிலே ஒளிர்ந்திடுமே!

உழைத்திடவே நம்வாழ்வும் உலகத்தில் உயர்ந்திடுமே
உழைப்பவனும் தளர்ந்திட்டால் உலகத்தில் நிறையுண்டோ?
பிழையாவும் தவிர்த்திடுவோம்
பிறர்மனத்தில் நிலைத்திடுவோம்
உழைப்பதாலே நோயின்றி உலகினிலே வென்றிடுவோம்!

—

வாழ்வியல் கவி,
(சா.நாகூர் பிச்சை)
துபாய்.



---

# பா.... ரதி... யார்???

எட்டயபுரத்து கவி, முண்டாசு கவி,
முறுக்கிய மீசை கவி நீவீர் அறிந்ததே.

பா என்றால் கவிதை..... ரதி என்றால்..... அழகு..
எட்டயபுர மன்னனுக்கு தொலை நோக்குப் பார்வை அதிகம்
அதனால் அதனால் அகவை ஏழில் பாரதி பட்டம்
அரசன் தீர்க்கதரிசி. அதனால் பாரதி பெயர் சூட்டப்பட்டார்.

பா... பக்கத்தில் ரன் நகரத்திற்கு பொட்டு வையுங்கள்
பார் தி என்று வரும். நெருப்பினை ஒத்தவன்.
எத்தனையோ சிறப்பு சுப்பிரமணியருக்கு.

சமகாலத்தில் எத்தனையோ புலவர் இருக்க
பாரதி மட்டும் அகவை 142 ஐ கொண்டாடுகிறார்.
காரணம் அவன் பாரதி.

எங்கும் சக்தியை நோக்கினார்
அனைத்தும் பெண்மை மயம்
காணி நிலம் கேட்டார்
காக்கை குருவிகள் நம் இனம் ஆயின.

ஜெய பேரிகை கொட்டினார்
சுதந்திரம் சுவாசம் பெற்றது.

தாயும் தந்தையும் மகிழ்ந்து
விளையாடியதும்
இந்நாட்டின் பெருமை என்றார்

சிந்தையில் ஆயிரம் எண்ணம்
வளர்த்ததும்
புண்ணிய பூமியின் செழுமை என்றார்

பனிமலையில் விளையாடி
பார் முழுதும் கடலில் கப்பல் விட்டார்
உலகம் உறவானது.

சுதந்திரம் பெறுவதற்கு முன்னே பள்ளு
பாடினார்
வீடு நடை போட்டால்
சுதந்திர அன்னையவள்

விடுதலை வேள்விக்கு, கவிதையால்
புரட்சி செய்தார்
அடிபணிந்தான் வெள்ளையன்.

பாரத அன்னைக்கு திருப்பள்ளி எழுச்சி
பாடினார்
பாரத தேசமே விழித்தெழுந்தது.

நெஞ்சு பொறுக்காமல் அஞ்சியவரை
பேதை என்றார்
சுதந்திர வீரம் பொங்கி எழுந்தது.

நதியின் இசையினிலே தெலுங்கில்
பாட்டு இசைத்தார்
மாநிலங்கள் சொந்தமாயின.
மனதில் உறுதி கேட்டு பெண் விடுதலைப்
போற்றினார்.
பெண்ணியம் சிறந்தது.

பேதமை மறந்த மானுடம் கேட்டார்
போற்றி வளர்ந்தது மனிதநேயம்.

இன்பங்களை கோடியில் கேட்டவர்
இன்னல்களை தூசு தட்டினவர்

காக்கை சிறகினில் கருமை கண்டவன்
கவிதையில் ஆயிரம்
மேன்மைசொன்னவன்

ஐ மொழி அறிந்திடனும் தமிழை
குருதியாக்கினார்
தகித்தது கவிதை விழித்தது தமிழகம்.

கவிதைகளில் தொட்ட உச்சம்,
குயிலுக்கும் பாப்பாவுக்கும் பாட்டு
கண்ணனுக்கு பல உறவு காட்டியவன்
கண்ணம்மாவை
பெருமைப்படுத்தியவன்.

தேசியத்துக்கு கீதங்கள் தோத்திரத்திற்கு
பாடல்கள்
பாஞ்சாலியின் சபதத்தில் பசி மறக்க
வைத்தவன்

ஏடுகள் என்றும் சுவைத்து
கொண்டிருக்கிறது அவன் பெருமையை
ஒவ்வொரு ஆண்டும் அவர் கவிதைகள்
புதுப்பிக்கப்படுகின்றன
சிறிய வயதில் உடல் மறைந்தாலும்,
உலகம் உள்ளவரை
பாரதி யார் என்று சொல்லும்.

—

ஹேமா லதா

# பூமியின் நுரையீரல்...

சொற்கள் மறந்தவன்
கவிதைகளில் நிரம்பி வழிகிறது
மௌனம்.
/

வார்த்தைகளை எழுதாமல்
இருக்கிறான் கவிஞன்
ஆடாமல் அசையாமல்
அப்படியே நிற்கிறது கவிதை.
/

நிற்காமல் கொட்டுகிறது
அருவி
கையில் குடத்தோடு போனவள்
நகராமல் நிற்கிறாள்
ஓவியத்தில்.
/

உன் நினைவுகளை
பிழிகின்ற தருணம்
நீ சாறாகிறாய்
நான் சக்கையாகிறேன்.
/

வீழ்ந்த சருகும் அழுகிறது
விழுந்த வலியால்
மண்ணும் அழுகிறது
வறட்சியால்
ஒருவருக்கும் தெரியவில்லை
கண்ணீர்.
/

ஒவ்வொரு
மரமும் பூமியின்
நுரையீரல்.
/

விழிகளைத் திறந்து வைத்துக்
கொண்டும் தூங்கும் கனவில்
அவள் வந்திருக்கிறாள்.
ஆனந்தத்திலும் பேரானந்தம்
எனக்கு.
/

வானவில்லே காதலிக்க
வண்ணங்களைத் தந்து போ
மெழுகாய் கரைகிறது வாலிபம்.
/

பூக்களை மட்டுமல்ல
முட்களையும் மெதுவாகத் தொடு
மென்மை உணர...!
/

ஒன்றை விழுங்கி
ஓராயிரம் தரும்
நிலம்.
/

போக இடமில்லாமலில்லை.
மிகவும் பிடித்திருக்கிறது
உன்னை.
அதனால்தான்
உன் இதயத்தை விட்டு
இறங்க மறுக்கிறேன் நான்
/

அன்பெனும் துடுப்பிழந்த படகு
காதலெனும் கடலில்
கரை ஒதுங்காது.
/

மொட்டினைப் பார்த்துக்
கொண்டிருக்கிறேன்.
பூ முகிழ்த்தலின் கணம்
அகப்படவில்லை பார்வைக்கு.
/

உன் சூரியப்பார்வை
சூறையாடியதில் நான் எவ்வளவு
சிதைந்திருக்கிறேன் பார்.
/

மண்ணில் மின்னலை.
காட்சிப் படுத்துகிறது
வேரோடு சாய்ந்த மரம்
/

விளக்கேற்றியவளை
வெளிச்சத்தில்
கூட்டுகிறது சுடர்.
/

ஆகாயம் அழும்போது
ஆசைதீர நனைந்து கொள்கிறேன்
மண் போல் நான்.
/

உன் பக்கமிருந்து
வரும் காற்றில் வருகிறது
என்வாசம்.
/

தூக்கி எறிகிறாய்
அந்த வட்டத்திற்குள்
சரியாய் விழவேண்டும் நான்.

—

கவிதைகள் ஆக்கம்
பாரியன்பன் நாகராஜன்
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353



## இரவெல்லாம்

மழை வேண்டி பிரார்த்தனை
தவளையின் சப்தம்

மழை
கரையும் இயேசு பிரான்
சாலை ஓவியம்

பூச்சியின் இறுதி ஊர்வலத்தில்
எறும்புகள்

-
செந்தில்

# பொருண்மை: நூல்துணை நாளும் கொள்.

*பா வகை: சந்தக் கலி மண்டிலம்*.

இன்னல்களை கதிரின்வழி
இலைநீரென அழிப்பாய்

தன்னையறிவாய் நூல்வழியிலே
தகுதிகளையே வளர்ப்பாய்

நன்னெறியிலே சிந்தித்திட
நாள்தோறுமே கற்பாய்

நின்துணையெது வாயிருப்பினும்
நிலைநிறுத்திட நிற்பாய்!

கொடியுங்கொழு கொம்புபோலவே
கொள்கையென்றுமே துணைகொள்

அடிமுழுமென என்றென்றுமே
அறநெறியையே துணைகொள்

கடிவாயிலே நச்சுமாந்தரே
கடினமனதை துணைகொள்

நொடிமாறிடும் உலகிலென்றுமே
நூலைநாளுமே துணைகொள்!

—

பாவலர் சு. வித்யாகார்த்திக்,
(பழநி)








**N.S. சங்கமித்ரா,**
மூன்றாம் வகுப்பு,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
வடுவூர் தென்பாதி.

# துயரத்தின் இடுக்கு

துயரத்தின் இடுக்குகளில்
வசமாய் சிக்கித் தவிக்கிறேன்
உன்னுடனான வாழ்தலில்
சொர்க்கம் இருந்ததில்லை
என்றாலும் மகிழ்வின் உச்சத்தில்
தருணங்கள் பல வசமாயிருந்தன
இன்றோ நரகத்தின் ஜுவாலை
விலகாது பொசுக்க விழைகிறது
திரும்புதல் சாத்தியமில்லை நீ
உனக்கான காத்திருத்தலை
வழக்கமாக்கி எதிர்ப்பார்க்கிறேன்
நீவரும் வழியெங்கும்
வெறுமையின் கொடிய சிலுவை
நீர்க்கொண்ட விழிகளோடு
தனிமையின் துணையுடன்
வீற்றிருக்கிறேன்
பொன்னிற மலர்கள் உதிர்த்து
என் கன்னங்கள் துடைக்கிறது
நீ நட்டுவளர்த்த
வசீகரக் கொன்றை!

## ஊதாநிற நறுங்குருதி

உனக்கு மிகவும் பிடித்த
உதாநிறச் சாற்றினை
என் விழிகளால் வியந்து
இதமாய் உறிஞ்சிப் பருகுகிறேன்
தன் அடர்ச்சிவப்பை மாற்றி
தேகமெங்கும் படையெடுக்கிறது
ஊதாநிறத்தின் நறுங்குருதி
உயிரின் அணுக்களில்
மெல்ல அவிழும் பூக்களை
உதடுகளில் மணந்து வருகிறேன்
என் யாவற்றிற்கும் ஏதுவாக
தோகை விரிந்த மயிலாய்
எழில் நிரம்பி நெருங்குகிறாய்
தலைக்குமேல் திறக்கிறது
சொர்க்கத்தின் நுழைவுவாயில்!

## வெறுங்கூடு

உன்னுடன் திகட்டாத பகலை
அந்தியின் பசித்த வாயில்
கசப்பு மருந்தெனப் புகட்டுகிறேன்
வேறு வழியின்றி சிரமத்துடன்
நீ விலகிய வலிகளால்
முள்ளென தைக்கிறது
இரவின் மென்பஞ்சு மெத்தை
எவ்வளவு நேரந்தான்
தலையணையாய் நினைத்து
உனைத் தழுவி உயிர்க்க
உறக்கமற்றுத் திரியும்
பிணந்தின்னிக் கூகையின்
குருதிச்சொட்டும் அலகில்
முதலும் கடைசியுமாம் ஒட்டியிருப்பது
நீயின்றித் தனித்திருக்கும்
உயிரற்ற என் மாமிசத்தின்
வெறுங்கூடு மாத்திரமே
என்றறிகையில்
பேரலைகள் விரித்தெழும்
செங்கதிரின் பிரகாசத்தை
நாணிட செய்யலாம்
மறுநாள் நீயொளிரும்
என் தெய்வீக இதயவானம்.

## நறுஞ்சூட்டின் இதம்

நதியை விழுங்கிச்
செறித்திடும் கடலை
மெல்ல விழுங்கி
இதயம் நிரப்புகிறேன்

வானமும் கடலும் சந்திக்கும்
தொடுவானச் சுவற்றில்
விழிகள் மோதி நீரில் விழுவதை
இருளும் அந்திமாலை
யாருக்கும் புலப்படுத்துவதில்லை
தனலென மாறி
கடற்கரை மணல்
என் மொத்தமும் தீய்க்கிறது
நறுஞ்சூட்டின் இதத்தில்
ஜீவன் உருகிட
நாணிச்சுடரும் பிறைநிலவின்
பள்ளத்தில் ஊற்றி வழிகிறேன்
விழிகளில் திரளும்
வாழ்தலின் அர்த்தம்
அன்றைய நாளின்
அகல நீள உயரக் காரணிகளால்
கடற்கரை நண்டுகளாய்
அங்குமிங்கும் ஓடித்திரிகின்றன
குருதிவடியும் இரணங்களை
களிம்பிடும் விரல்களின்றி
ஓய்வற்ற அலைகளின் மடியில்
ஓயாமல் தலைசாய்கிறேன்
ஒவ்வொரு முறையும்
நுரைகளைத் தெரித்து
உப்புக்காற்றை வீசிடும்
பெருங்கடலின் துயர்
என்னிலும் மிகையாக
இருக்கலாம்.

## புயல்

ஆளும் அதிகாரத்தின்
அமைதியான இதயத்தை
அதிர்ச்சியாக்கி நகைக்கும்
அபாய அசூரன்
குறைசொல்லக் காத்திருக்கும்
எதிர்க்கட்சி நாக்குகளின்
எதிர்பார்ப்பு அவதாரன்

வானிலை அறிக்கையாளரைச்
சிலநேரம் கடவுளாகவும்
சிலநேரம் காமடியனாகவும்
உருமாற்றி நகைக்கும்
கணிக்க இயலாத
காற்றுக் குறும்பன்

தம்பட்டம் அடித்துத் திரியும்
தகவல் தொடர்பு சாதனங்களின்
முதன்மைச்செய்தி மற்றும்
முழுநேர நேரலைச் செய்தி

மீனவ நண்பர்களின்
சிலநாள் பணிஓய்வு
இராணுவ நண்பர்களின்
அதிதீவிர பேரிடர்மீட்பு

கடற்கரையில் அமர்ந்து
காண்போர் யாருமின்றி
ஆளுயர எழும்பி
ஆர்ப்பரித்து நடனமாடும்
ஆழிப் பேரலைகளின்
அற்புத அரங்கம்

கல்வி நிறுவனத்தின்
கருணைமிகு விடுமுறைத் தோழன்
கடலோர மாவட்டத்தைக்
கலங்கடிக்கும் காட்டேரிப்பேயன்

வலுவற்ற மரங்களின்
வாழ்வினுக்கு

வலுக்கட்டாயமாய் எழுதுப்படும்
மரண சாசனம்
செழித்து வளர்ந்த வயல்களில்
பெருகிப் பாயும்
பேரழிவுப் பாசனம்

வறண்ட நீர்நிலைகளின்
வயிறுநிரப்பும் அட்சயபாத்திரம்
வளரும் மீன்களின்
வாழ்வை நீடிக்கும்
இரட்சக அஸ்திரம்

இயல்பு வாழ்வின்
இறுதி ஊர்வலம்
வறுமை வாழ்வின்
வெறுமை போஜனம்

நகர மக்களின்
நகர்த்த இயலாத
கண்ணீர் போர்க்களம்
கிராம மக்களின்
ஆறு ஏரி ஓடை
நிரம்பும் நல்வரம்

இன்பமும் இடரும்
இயைந்த வாழ்வினை
இல்லத்துள் முடக்கி
உணர்த்தும் இயற்கையை
எதிர்க்கும் ஆற்றல்
எவர்க்கும் இல்லை

புயல் நூறு வந்து
புத்திப் புகட்டினாலும்
எளியோரை ஏய்ப்பதும்
மெலியோரை மேய்ப்பதும்

அநியாய அதிகாரத்தின்
அன்றாட விளையாட்டு
எப்பொழுதும் போல
ஏமாந்து வாழ்வதுவே
ஏழைகளின் தலையெழுத்து

## சாபக்கேடு

நாளெல்லாம் மரம்வெட்டி
நானூறு சம்பாரிச்சு
வீட்டுக்கு வந்தவுடன்
விலகாது குடிப்பழக்கம்

அந்தி சாய்ந்தாலே
அழைத்திடுதே மதுக்கடை
யார்வந்து தடுத்தாலும்
ஏற்காது மனச்சுமை

மனைவிக்கு இருநூறு
மகளுக்கு ஒருநூறு
கூடா நட்போடு
குடிக்க ஒருநூறு

பங்கிட்ட காசோடு
பவுசாக நடைபோட்டுக்
கடைக்குள் நுழைந்தாலே
கச்சேரி ஆரம்பம்

மூச்சுமுட்ட குடியேற்றி
மூளைநரம்பில் வெறியேற்றி
சாலையில் நடக்கையிலே
சாய்ந்துவிழும் உடல்மண்ணில்

நினைவிழந்த கருந்தேகம்
நிர்வானத்தில் பிதற்றிடவே
வழிப்போக்கர் வாயெல்லாம்

வசைபாடி சிரித்திடுமே

வாயெல்லாம் ஈமொய்க்க
நாய்வந்து வாய்நக்க
எதுவும் அறியாம
இருட்டுக்குள்ள புரண்டபடி

பாதிக் குடிபோதை
பக்குவமா தெளிந்ததுமே
வீட்டு ஞாபகத்தில்
விழுந்து எழுந்து நடைபோட

சேறும் சகதியுமா
செடிகொடி தழையோட
ஊரே சிரிக்கும்படி
ஊடுபோயி சேர்கையிலே

தொடப்பக் கட்டையால
தொவச்சி எடுப்பாங்க
பிய்ஞ்ச மொறத்தால
பிச்சி எடுப்பாங்க

விலகாத போதையில
வீடுமாற்றி நொழைஞ்சாக்கா
சாமின்னா வணங்குவாங்கா
சன்மானந்தான் வழங்குவாங்க

ஆனது ஆகட்டுன்னு
அடிவாங்கி கெடக்கிறதும்
போனது போகட்டுன்னு
போதையில மறக்கிறதும்

குடிகாரன் வழக்கமாகும்
குனிவேதான் தலைக்குமாகும்
மனைவிக்காக திருந்தவேண்டாம்
மகளுக்காச்சும் மாறவேணும்

முடிவோடு விழித்தெழுந்து
முழுமூச்சில் வேலைசெய்து
கூலிய வாங்கினதுமே
கூப்பிடுதே இந்திரலோகம்

அரசாங்கம் தடுக்காது
அடிநெஞ்சும் மறக்காது
திருந்தாத ஜென்மத்தோடு
திரிவதுதான் சாபக்கேடு.

—

பொன். தெய்வா,
ஐவேலி,
விழுப்புரம் மாவட்டம்.





க. ஆகாஷ் கலைச்செல்வம்,
எட்டாம் வகுப்பு,
பரவாக்கோட்டை

# என்ன?

உச்சகட்ட வெற்றியில்
இதுக்கும் மேலே

மிகப்பெரிய தோல்வியில்
இனி மேல்

## இருந்தாலும்

என்னதான்
முன்னர் பெற்ற
அனுபவத்ததாலும்

வளர்த்து கொண்ட
திறனாலும்

சரியான புரிதல்
இருந்தாலும்

இலக்கு
திட்டமிடல்
செயல் பற்றி
தெளிவு இருந்தாலும்

முடியும் என்ற
நம்பிக்கை
இருந்தாலும்

நாளைய
செயல் பற்றிய
சின்னதாகவேனும்
பதற்றம்
தவிர்க்க இயலாதவை
மனித மனங்களில்...

## கழித்தலுக்கும்

கூட்டலுக்கும் பின்....

செயல் தோல்வியின்
சுய பரிசோதனையில்
நான் எப்போதும்
சரி தான்
என்ற யோசிப்புகள் இல்லா
முன் தீர்மானங்களை
கழித்தும்...

விமர்சனம் செய்பவர் பற்றி
தன் அபிப்பிராயமின்றி
சொல்லப்படுபவை
மட்டும் திறந்த மனதுடன்
கூட்டிக்கொண்டால்
அப்புறம் என்ன?
அடுத்தது வெற்றி தான்...

## பொறுத்து..

இந்த தெருமுனையில் தானே
சகாக்களோடு
நிறைய பேச்சு

இந்த ஆடை தானே
இந்த ஆண்டு
இங்கு
தேடித்தேடி
ஆசைப்பட்டு
வாங்கினோம்

இந்த நிறுவனத்தின்
நேர்முகத்தேர்வில்
தெரிவு செய்யப்படாமல்
போனோம்

இந்த போட்டித்தேர்வில்
தானே பல முயற்சிகளுக்குப் பிறகும்
வெற்றி கிடைக்கவில்லை

இங்கே தானே
திறமை காட்டி
செய்பணி பெற்றோம்

இந்த  சிக்கலுக்கு தானே
சரியான தீர்வு சொல்லி
பாராட்டு பெற்றோம்

இந்த செய்த உதவிக்கு
தானே பெற்றவரின்
நன்றி கிடைத்தது

இதற்கு தானே
பிறரின் தவறால்
பிறரின் செயல்பாடின்மையால்
செய்பணியில்
அவமானப்பட்டோம்

என
மகிழ்ச்சியும்
வருத்தமும்
நினைவு பயணத்தில்
நீண்டு கொண்டே
போவது

எண்ண கிடைக்கும்
நேரத்தையும்
நேரம் கிடைத்தாலும்
அப்போதைய
சூழ்நிலையும்
மன நிலையையும்
பொறுத்தது

## அப்ப மட்டும் இல்லை

நிகழும் கணங்களில்
என்ன இது
அடுத்து அடுத்து
தோல்வியும்
இழப்பும்
சோகமும்
ஏமாற்றமும்
என எண்ணம் வருவதில்லை

தனித்த பொழுதுகளில்
அதனுடன் கைகோர்த்து
கொள்கின்ற
முன்னர் நடந்த
அடுக்கு அடுக்கான
நினைவுகளும் தான்

## எண்ணம் கொண்ட பின்...

பிறரின்
ஒரு சொல்லோ
செயலோ
'பிடிக்கவில்லை என்றாலும்'
'தவறு என்றாலும்'

ஒட்டு மொத்தமாய்
அவர் அப்படித்தான்
என்ற எண்ணம் கொண்டால்

பிற நல்ல செயல்களும்
பேச்சும்
எதிர் மறையாகத்தான்
விமர்சிக்கப்படும்

கடிவாளமிட்ட

குதிரையாய்...

## இரு பார்வைகள்...

பிறரின்
முயற்சிகளும்
சாதனைகளும்
வெற்றிகளும்

பாராட்டுவது
அதில் தான்
நம்பிக்கை கொள்வது
ஒரு வகை...

அதை எல்லாம்
கண்டு கொண்டால்
தாழ்வு மனப்பபான்மை வரும்
தன் இலக்கில்
கவனம் சிதறும்
என்று நினைப்பது
ஒரு வகை...

நீங்கள்
எந்தப்பக்கம்?..

## அது தான்

வாசிப்பு சுவராஸ்யத்திற்கு
வசந்த வார்த்தைகளோ

நிகழ்கால
உண்மைகள்
பேசும்
பாடு பொருளோ

சுவராஸ்யமிக்க
சுய அனுபவங்களோ

சமூக அவலம்
பேசுபவையாகவோ

உறவுச்சிக்கலும்
அதற்கான தீர்வுகளாகளாவோ

மனித மன
இயல்புகளையும்
குணங்களையும்
விவரிப்பவையாகவோ

மனிதமும்
நேர்மையும்
உதவுதலும்
உலகில் உள்ளன
என நம்பிக்கையையோ

தோல்வியும்
வெற்றியும்
சந்தோஷமும்
துக்கமும்
எதிர்பார்ப்பு
கலந்தது தான்
வாழ்க்கை
சொல்வதாகாவோ

இப்படி ஒன்றை சொல்லி
வாசகனின் மனதில்
தாக்கத்தை
ஏற்படுவது தான்
படைப்பு

## போதுமே...

பேசும் விடயம்

தெரியாமால்
இருப்பை காண்பிக்க
வாய் மொழி
சொல்கையிலும்

ஒரு காலத்திலே நான்
என்ற சுய தம்பட்டம்
அடிக்கும் கணத்திலும்

விமர்சனம் செய்யப்படுபவர்
அருகில் இல்லாத போதும்
நமக்கும் அவர் பற்றி
தெரியாத நிலையில்
குறைகள் சொல்லப்படுகையில்

சொல்வது தவறு
என்று தெரிந்த நிலையில்
அடுக்காய் பொய்கள்
சொல்லப்படுகையில்

சொல்லும் நிலையில்
இருந்தால் போதுமே

கேட்க வேண்டிய
நிர்ப்பந்தத்தால்
இருந்தால்
மனதின் குரலாய்
போதுமே...

## வழக்கமான...

இன்றைய
இருப்பை
முழுவதுமாய்
செலவழிக்கையில்
நாளைக்கு
என்ன செய்வாய்
என்ற கேள்விக்கு

இன்றைக்கு
இது தான்
சாத்தியம் என்ற
துல்லியமற்ற முடிவில்
நாளை இது பற்றிய
விமர்சனம் வருமே
என்ற தர்க்கரீதியான
வினாவுக்கு

இன்றே
முடிக்க வேண்டியவை
பாதியில் நிற்க
நாளைக்கு இதற்கான
கேள்விக்கு என்ன பதில்

இன்று
பதிலே கிடைக்காத
வினாவுக்கும்
தீர்வே வராத
குழப்பத்துக்கும்
இதற்கான
விடையாய்
நாளை என்ன
செய்யப்போகிறாய்

என்பதற்கு
வழக்கமான
பதிலாய்
பார்த்துக்கலாம்

## இவைகள் எல்லாம்...

உதயமாகி கொண்டே

இருக்கும் எண்ணங்கள்

கட்டளையிட்டு கொண்டே இருக்கும்
மனம்

செயல்பட்டு கொண்டே
இருக்கும் புத்தி

பணிக்காய் தயாராகி கொண்டே
திட்டமிடல்

செயலாகத்துக்கு
கொடுத்து கொண்டிருக்கும்
உழைப்பு

இலக்கை அடைந்த பிறகும்
உணரும் சந்தோஷம்

தோல்விக்கு பிறகு
பெற்றே ஆக வேண்டும்
கொள்ளும்

வைராக்கியம்

ஓய்வு பொழுதுகளில்
வளர்த்து கொண்டே
போகும் தனித்தன்மை

உழைப்புக்கு பின்னான
பொழுதுகளில்
ரசித்து கொண்டே
இருக்கும் பொழுது போக்கு

இவைகள் எல்லாம்
வாழ்க்கையை
அடுத்த நகர்வையும்
அர்த்தப்படுத்தலையும்
செய்கின்றன....

—



*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை.

# வேலைக்குச் செல்ல முடியவில்லை

பிள்ளைகளை
பள்ளிக்கு
அனுப்ப முடியவில்லை
வலிதாங்க முடியாத அம்மாவை
மருத்துவமனைக்கு
அழைத்துச்செல்ல முடியவில்லை,
போட்டித்தேர்விற்காக
பயிற்சி பெறமுடியவில்லை,,
ஓயாது பெய்யும் மழையால்,
ஆனாலும்
நிற்கச்சொல்ல மனமில்லை...

ஒரு குடம் குடிநீருக்காய்
பல மைல் தூரம் பயணிக்கும் மனிதர்கள்
இப்போதுமிருக்கிறார்கள்!

—



*மு. முபாரக்,*
திருச்சி.

# குறுங்கவிதைகள்

எத்தனை எத்தனை கவிதைகள்
இரவு முழுவதும்
வானில் ஒளிரும் மின்மினிகள்

ஒரேயொரு பால்கிண்ணம்
சிதறிக்கிடக்கும் துளிகள்
அருந்தும் இரவு

பெயரில் மாத்திரமே
உறுதி மிக்கவை
சில வாக்குறுதிகள்

வேர்களை மறக்கவில்லை
தனக்குள் பிறக்கும்
நரம்புகளோடு இலைகள்

கண்கட்டு வித்தையல்ல
கண்காட்டும் வித்தையே
அவள் விடயத்தில்

ஒரே மனிதன்
பல தூக்கங்கள்
ஒரே கனவு

உண்மை மட்டுமே பேசும்
உயர்ந்த மனிதன்
உறக்கத்தில்

பிடிக்காத தர்மம்
கிடைப்பது அரிது
தொலைந்த பணம்

## தன்முனையியைபுக் கவிதைகள்

வல்லமை பெறுவது
வாழ்வின் சிறப்பு
நல்லதையே நாடுவது
நாளும் உன் பொறுப்பு

கடமை புரிந்து
கண்ணியம் காப்பாய்
காலத்தால் அழியாத
புண்ணியம் சேர்ப்பாய்

விரிசலோடு வாழ்ந்தால்
உறவுகள் துறக்கும்
புரிதலோடு வாழ்தல்
நன்மை பயக்கும்

நிலவு மகள்
வானத்தில் பவனி
மேகத்திரைகள் விலகி
வழி விடுவதைக் கவனி

அறிவை வளர்த்திட
ஆயிரம் வழிகள்
உயிரெனவே பயின்றிடுவோம்
உன்னத நூல்கள்

முடிவு செய்யாமல்
செயலில் இறங்காதே
முத்தெடுக்காமல்
சட்டென நிறுத்தாதே

நாடுகள் தோறும்

நாகரிகத்தின் வளர்ச்சி
நமக்கெல்லாம் சாட்சியாக
நடந்திடும் அகழ்வாராய்ச்சி

வரண்ட பூமி
வாடிடும் உயிர்கள்
திரண்ட மழையைத்
தேடிடும் பயிர்கள்

கூட்டாக வாழ்வது
கோடி நன்மை தரும்
ஆட்படும் ஆபத்துகள்
அருகிப்போய் விடும்

வன்முறையும் போரும்
வையகத்தில் ஒழியட்டும்
அமைதியான வாழ்க்கை
அனைவருக்கும் கிடைக்கட்டும்

—

*Dr ஜலீலா முஸம்மில்,*
ஏறாவூர்,
இலங்கை.



---

# மேக தூது

மேகமே வெண்மேகமே, திரண்டு வந்து
வானில் விளையாடும் மேகமே!

உன் வரவால் வானில் ஏற்படுமே பல
சித்திரம், அதன் அழகு கண்டு மெய்
மறந்து நாங்கள் பரப்போமே!

சித்திரங்கள் மட்டுமே நீ தந்திடுவாய்
வெண் மேகமே, உலகம் குளிரச் செய்ய
முன்னால் முடியுமா மேகமே!

அதற்கு உன் சகோதரன் கருமேகம்
வேண்டுமே, அவன் வந்த பின் தான்
எங்கும் குளிர் வீசுமே!

பயிறுகள் மகிழ்ந்து நல்ல ஆட்டங்கள்
போடுமே, சின்னஞ்சிறு உயிர்களும்
கருமேகம் கண்டு ஆடுமே!

எங்கும் வளம் பெருக கருமேகம் வர
வேண்டுமே, வெண்மேகமே நீ சென்று
கரு மேகத்தை அழைப்பாயே!

உலகம் கேட்கும் இந்த அழைப்பை நீ
தூதாக கருமைத்திடம் சொல்வாயே!!

—

எம். என். பாஸ்கரன்,
கிராம நிர்வாக அலுவலர் (ஓய்வு),
மன்னார்குடி.

# கனவெல்லாம் கார்த்திதைகைதான்

முன்பனிக்காலமோ..???

முழுநிலவொளியை மறைத்திடும் படி
தீபம்
ஏற்படும் நேரமோ...???
வசந்தகாலத்தின் வாயிற்படியோ...????

ஐப்பசி அடைமழை அமைதியாகும்
காலமோ...???

கார்கால மழையோடு காதலுற்று
மண்வாசனை பரவிக்கிடக்கும்
மண்ணோ..!!!!

மார்கழி மாக்கோலத்தை மறைந்து
விடுமோ என்றே....மௌனமாக
மண்ணை மயங்கச் செய்யும்
சமயமோ.....???



காய்ந்த இலைதனை
தள்ளிவிட கானக
மரங்கள் தயாராகும்
தருணமோ....???

பச்சிலைத் துளிர்த்திட
பின்பனிவந்து பிணைந்திடும்
காலமோ...
பின் என்ன தான் அது...???

மார்கழி என்னும் காதலிக்காக
காத்திருந்து கனவுகானும் காதலனே
கார்த்திகை
கனவெல்லாம் கார்த்திகை தான்

—

*G. சூர்யகலா சரவணன் B.E.,*
கண்டிதம்பேட்டை.



**ஓவியம்:**
**மா. நிரல்யா,**
**இரண்டாம் வகுப்பு,**
**சிங்கப்பூர்.**

# அவள் இன்னும் பழைய அவளை அடிக்கடி பார்த்து நினைவுகளை ரசித்துக் கொள்கிறாள்..!

*அந்த நினைவுகள் சற்று வித்தியாசமானவை !!!*

*தேநீர் வைக்கும் இடைவேளைகளில் நுறைகளென பொங்கும்...*

*என்றாவது குளித்து விட்டு கண்ணாடியை இரண்டு நிமிடங்களுக்கு மேலாக பயன்படுத்தும் நேரங்களில் குறும் புன்னகைகளாக...*

*கணினியின் விசைப்பலகையை அழுத்தி அழுத்தி தேய்ந்த கைகளை வாயில் வைத்து எதையாவது யோசிக்க துவங்கும்போது திடீரென தோன்றும் அந்த பழைய நினைவுகள் அவ்வளவு பலமானவை..!*

*அனுதினமும் வந்து போகும் அளவுக்கு வலிமையானவை என்பதை அவ்வப்போது கண்களில் எட்டி பார்க்கும் கண்ணீர் துளிகள் தான் உறுதி படுத்திக் கொள்ளும் !*

— *த. சரண்யா ரவி,*
கோவை.



**துன்பக்குளத்தில்**
**நாரைகளை விரட்டிவிட்டு**
**தூண்டிலை வீசுகிறான்**
**ஞானி!**

–
**ரகுநாத். வ,**
மதுரை

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.